திரு. என். ஏ. பூங்காவனம்: நான் திரும்பவும் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 55-ல் கொடுத்திருக்கிறார்கள். நான் கூப்பிட்டு விதி 54-ன் கீழ் கொடுங்கள் என்று சொன்னேன். விதி 54-ன் கீழ் எடுத்துக்கொள்வதை பற்றி பரிசீலிக்கலாம்.

(இ) ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்—திருவண்ணாமலை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலே இருக்கின்ற அதிகாரிகளுக்கும் விவசாயிகளுக்குமிடையில் மோதல் ஏற்பட்டு வியாபாரம் நடைபெறாமல் தேங்கிக் கிடக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபற்றி விதி 54-ன் கீழ் கொடுங்கள். அதை எடுத்துக்கொள்ளலாம்.

2. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) பயிரிடு குத்தகைதாரர்கள் (தனி விதித்துறைகள்) (சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: ‘‘தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (தனி விதித் துறைகள்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்’’.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச்சட்ட முன்முடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS